நேற்று (05.10.2023) சென்னை, தலைமைச் செயலகம், வேளாண்மை துறை கூட்டரங்கில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் "எழுத்தாளர் – கலைஞர்" என்ற குழுவின் கூட்டம், இக்குழுவின் தலைவரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இணைத் தலைவர்கள் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி.என். கயல்விழி செல்வராஜ், உறுப்பினர் செயலரும், சமூகநலத் துறை ஆணையருமான திருமதி வே.அமுதவல்லி, உறுப்பினர்கள் ஆர்.பூரணலிங்கம், ஆர். பாலகிருஷ்ணன், ஏ.எஸ். பன்னீர்செல்வன், கலாப்பிரியா. எஸ்.ராமகிருஷ்ணன், திருமாவேலன், இமையம், அறிவுமதி, வி.எம்.எஸ்.சுபகுணராஜன், கவிஞர் சல்மா, தமிழ்மகன், பொதியவெற்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திராவிடர் கழகத்தின் சார்பில் தஞ்சையில் - முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

'சமூகநீதிக்கான சரித்திர நாயகர்' - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டு விழா!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில்! முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்புரை!

சென்னை,அக்.6- முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா, 'சமூக நீதிக்கான சரித்திர நாயகர்' தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டு விழா தாய்க்கழக மாம் திராவிடர் கழகத்தின் சார்பில் தஞ்சை மாநகரில் எழுச்சியுடன் இன்று (6.10 .2023) மாலை நடைபெறுகிறது.

தஞ்சை மாநகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது. வரவேற்பு தோரணங்கள், கழக்கொடிகள் அமைக்கப்பட்டு உற்சாக மிகுதியில் தஞ்சை மாநகரம் திகழ்கிறது. திராவிடர் கழகம், தி.மு.க. உள்ளிட்ட சமூகநீதியில் அக்கறை கொண்டுள்ளவர்கள் தங்களின் குடும்ப விழாவாக கருதி விழாவுக்கு திரள்கின்றனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா, 'சமூக நீதிக்கான சரித்திர நாயகர்' தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டு விழா திராவிடர் கழகத்தின் சார்பில் இன்று (6.10.2023 - வெள்ளிக்கிழமை) மாலை 5:00 முதல் 8:30 வரை தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையம் அருகில் மாநகராட்சி மாநாட்டு அரங்கத்தில் தஞ்சை எஸ்.என்.எம். உபயதுல்லா நினைவரங்கம் இராஜகிரி கோ. தங்கராசு நினைவு மேடையில் நடைபெறுகிறது.

கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் வரவேற்புரையாற்றுகிறார்.

கழக செயலவைத் தலைவர் சு.அறிவுக்கரசு, பொதுச் செயலாளர்கள் முனைவர் துரை.சந்திரசேகரன், வீ.அன்புராஜ், பொருளாளர் வீ.குமரேசன், மாநில ஒருங்கிணைப்பாளர்கள் தஞ்சை இரா.ஜெயக்குமார், உரத்தநாடு இரா.குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

'தாய் வீட்டில் கலைஞர்' நூல் வெளியீடு!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தொகுத்த 'தாய் வீட்டில் கலைஞர்' நூலை தமிழ்நாடு முதலமைச்சர் வெளியிட, முதல் படியை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெற்றுக் கொள்கிறார். தஞ்சை மத்திய தி.மு.க. மாவட்டச் செயலாளர் - சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகரன், தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் -நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் - சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம், தஞ்சை மாநகர தி.மு.க.செயலாளர், - மேயர் சண்.இராமநாதன், தி.மு.க. மருத்துவரணி மாநில துணைச் செயலாளர் - துணை மேயர் டாக்டர் அஞ்சுகம்பூபதி ஆகியோர் நூலைப் பெற்றுக்கொள்கின்றனர்.

விழாவில் பாராட்டுரை!

சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதிபதி ஜி.எம்.அக்பர் அலி, மேற்கு வங்க மாநில மேனாள் தலைமைச் செயலாளர் ஜி.பாலச்சந்திரன் அய்.ஏ.எஸ்., தவத்திரு பாலபிரஜாபதி அடிகளார் ஆகியோர் பாராட்டுரை ஆற்றுகின்றனர்.

திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விழாத் தலைமையேற்று சிறப்புரை, பாராட்டுரை ஆற்றுகிறார்.

'சமூகநீதிக்கான சரித்திர நாயகர்' தமிழ்நாடு முதலமைச்சர் மானமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவுரை ஏற்புரை ஆற்றுகிறார்.

தஞ்சாவூர் மாவட்ட கழகத் தலைவர் வழக்குரைஞர் சி. அமர்சிங் நன்றியுரை ஆற்றுகிறார்.

கழகத் துணைப் பொதுச் செயலாளர் ச.பிரின்சு என்னாரெசு பெரியார் இணைப்புரை வழங்குகிறார்.

விழாவில், தி.மு.க. உயர் நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எல்.கணேசன், தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம், தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் கா.அண்ணா துரை, மயிலாடுதுறை தொகுதி நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினர் செ.இராம லிங்கம், அரசு தலைமைக் கொறடா சட்டமன்ற உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், தி.மு.க.தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர் நா.அசோக்குமார், து.செல்வம், சட்டமன்ற மேனாள் உறுப்பினர் எம்.இராமச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன், சட்டமன்ற மேனாள் உறுப்பினர் கே.டி. மகேஷ் கிருஷ்ண சாமி, தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் ச.இறைவன், தஞ்சை மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர், தி.மு.க. உஷா புண்ணிய மூர்த்தி, தஞ்சை ஒன்றியக் குழுத் தலைவர், தி.மு.க. வைஜெயந்தி மாலா கேசவன் உள்பட தி.மு.க. பொறுப்பாளர்கள் பங்கேற்கின்றனர்.

விழாவில் திராவிடர் கழகப் பொறுப்பாளர்கள் பிரச்சாரச் செயலாளர் வழக்குரைஞர் அ. அருள்மொழி, வெளியுறவுச் செயலாளர் கோ.கருணாநிதி, துணைப் பொதுச் செயலாளர்கள் பொறியாளர் ச. இன்பக்கனி, வழக்குரைஞர் சே.மெ.மதிவதனி, வழக்குரைஞரணி தலைவர் வழக்குரைஞர் த.வீர சேகரன், தொழிலாளரணி மாநிலச் செயலாளர் மு.சேகர், மாநில கிராமப் பிரச்சாரக் குழு அமைப்பாளர் முனைவர் அதிரடி க.அன்பழகன், திராவிடர் விவசாயத் தொழிலாளர் அணி மாநிலச் செயலாளர் குடவாசல் க.வீரையன், மாநில இளைஞரணிச் செயலாளர் த.சீ.இளந்திரையன், திராவிட மாணவர் கழக மாநிலச் செயலாளர் இரா.செந்தூரபாண்டியன், மாநில மகளிரணிச் செயலாளர் தகடூர் தமிழ்ச்செல்வி, திராவிட மகளிர் பாசறை மாநிலச் செயலாளர் வழக்குரைஞர் பா. மணியம்மை, கழகக் காப்பாளர்கள் வெ.ஜெயராமன், மு.அய்யனார், தலைமைக் கழக அமைப்பாளர் குடந்தை க.குருசாமி, தஞ்சாவூர் மாவட்டச் செயலாளர் வழக்குரைஞர் அ.அருணகிரி, மன்னார்குடி மாவட்டத் தலைவர் ஆர்.பி.எஸ்.சித்தார்த்தன், பட்டுக்கோட்டை மாவட்டத் தலைவர் பெ.வீரையன், கும்பகோணம் மாவட்டத் தலைவர் வழக்குரைஞர் கு.நிம்மதி, பட்டுக்கோட்டை மாவட்டச் செயலாளர் வை. சிதம்பரம், கும்பகோணம் மாவட்டச் செயலாளர் சு.துரைராஜ், மன்னார்குடி மாவட்டச் செயலாளர் கோ.கணேசன், தஞ்சை மாநகரத் தலைவர் பா.நரேந்திரன், தஞ்சை மாநகரச் செயலாளர் அ.டேவிட் வரவேற்பாளர்களாக களப்பணி ஆற்றுகின்றனர்.

'திராவிடமே வெல்லும்' கலை நிகழ்ச்சிகள்!

மாலை 5.00 மணிக்கு தெற்குநத்தம் சித்தார்த்தன், உறந்தை கருங்குயில் கணேசன், திருத்தணி பன்னீர்செல்வம் இணைந்து வழங்கும் 'திராவிடமே வெல்லும்!' பெரியார் கல்வி நிறுவனங்கள் வழங்கும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. திராவிடர் கழக தலைமை நிலையம் விழாவை ஒருங்கிணைத்துள்ளது.

சிக்கிம் வெள்ளம் :

பாதிக்கப்பட்டுள்ளோருக்கு ஆதரவு வழங்கிட ஒன்றிணைவோம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக்.6 - சிக்கிம் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டுள்ளோருக்கு ஆதரவு வழங்கிட ஒன்றிணைவோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு :-

சிக்கிம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள திடீர் வெள்ளத்தால் துயரில் ஆழ்ந்துள்ள அனைவருக்கும் எனது இதயபூர்வமான இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். காணாமல் போயுள்ள நமது தீரமிகு இராணுவ வீரர்கள் மற்றும் பலரது நிலையை நினைத்துக் கவலை கொள்கிறேன். பாதிக்கப்பட்டுள்ளோருக்குத் தேவையான உதவியையும் ஆதரவையும் வழங்கிட ஒன்றிணைந்திடுவோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை:

திருச்சி விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு!

தெற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

திருச்சி,அக்.6- திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

டெல்டா மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக இன்று (6-10-2023) வெள்ளிக் கிழமை காலை 11.00 மணிக்கு திருச்சி விமான நிலையத்திற்கு வருகைதரும் கழக தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களை வரவேற்க அனைத்து நிர்வாகிகளும் தவறாமல் விமான நிலையத்திற்கு வரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த நிகழ்வில் மாநில, மாவட்ட,மாநகர, நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர,பேரூர், கிளை, வட்ட, வார்டு செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அனைவரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

"மாணவ நேசன் – முத்தமிழறிஞர் கலைஞர் 100"

பள்ளி - கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகள்!

மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை,அக்.6- தி.மு.க. மாணவர் அணி சார்பில் "மாணவ நேசன் - முத்தமிழறிஞர் கலைஞர் 100" : பேச்சும் எழுத்தும் என்ற தலைப்பில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்று மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிவிப்பு வருமாறு:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, கழக மாணவர் அணி சார்பில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே போட்டிகள் நடத்திட அறிவுறுத்தப்பட்டு, கழக மாவட்ட அளவில் பேச்சு, கட்டுரை போட்டிகள் நடத்துப்பட உள்ளது. கீழ்காணும் தலைப்புகளில் போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மாவட்டக் கழக செயலாளர்களுடன் ஆலோசனை பெற்று, மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

கழக மாணவர் அணி சார்பில் நடத்தப்படும் பேச்சு, கட்டுரை போட்டிக்கான போஸ்டர், மாதிரி சான்றிதழ் உள்ளிட்டவை மாவட்ட அமைப்பாளர்களுக்கு தலைமைக் கழக மாணவர் அணி மூலம் வழங்கப்படவுள்ளது. அவற்றை அந்தந்த பகுதியில் அச்சிட்டு பயன்படுத்திக் கொள்ள கேட்டுக்கொள்ளப் படுகிறது.

போட்டிக்கான இடம், நாள் தேர்வு செய்து அத்தகவல்களை மாதிரி கடிதம் மற்றும் போஸ்டர்களில் அச்சிட்டு முறையாக மாவட்டத்திலுள்ள பள்ளி மற்றும் கல்லூரி நிர்வாகத்திற்கு கடிதம் மற்றும் போஸ்டர் வழங்கி, மாணவர்கள் அறியும் வண்ணம் விளம்பரம் செய்து மாணவர்கள் பெருமளவில் பங்கேற்கும் வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

போட்டிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த பிறகு, தங்கள் மாவட்டத்திற்கு பொறுப்பு வகிக்கும் மாணவர் அணியின் மாநில நிர்வாகிகளுக்கு முறையாக தகவல் தெரிவித்து, அவர்கள் பங்கேற்கும் வகையில் அழைப்பிதழை வழங்கிட வேண்டும். தலைமைக் கழக மாணவர் அணி சார்பில், மாநில நிர்வாகிகள் அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும் போட்டிக்கான நிகழ்வுகளை மேற்பார்வையிடுவர்.

மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களை பெறும் மாணவர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ்களை வழங்கி சிறப்பிக்க வேண்டும். இப்போட்டிகள் இம்மாதம் 22ஆம் தேதிக்குள் (22.10.2023) நடத்தி முடித்து, பின்னர் மண்டல வாரியாக போட்டிகள் நடைபெறும். மாநில அளவிலான இறுதிப் போட்டி நவம்பர் முதல் வாரத்தில் நடைபெறும் என்பதை கருத்திற் கொண்டு விரைவாக திட்டமிட்டு செயல்பட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளுக்கான பொதுவான விதிமுறைகள்

ஒவ்வொரு போட்டிக்கும் ஒரு கல்வி நிறுவனத்திலிருந்து நால்வர் பங்கேற்கலாம். பங்கேற்கும் மாணவர்கள் தாங்கள் பயிலும் கல்வி நிறுவனத்தின் அடையாள அட்டையுடன் வருதல் வேண்டும். (அடையாள அட்டை இல்லாதவர்கள் பள்ளி/கல்லூரி முதல்வர் அல்லது துறை தலைவர்களிடம் சான்றிதழ் பெற்று வருதல் வேண்டும்.) கட்டுரை எழுதுவதற்கான வெள்ளைத் தாள்கள் வழங்கப்படும். ஒரு மணி நேரத்திற்குள் எழுத வேண்டும். பக்கங்கள் வரையறை இல்லை.

பேச்சுப்போட்டியில், பள்ளி மாணவர்கள் 4 நிமிடங்கள் பேசுதல் வேண்டும். கல்லூரிமாணவர்கள் 5 நிமிடங்கள் பேசுதல் வேண்டும். ஒருவர் ஒரு போட்டியில் மட்டுமே பங்கேற்க அனுமதி உண்டு.

பள்ளி மாணவர்களின் போட்டிக்கான தலைப்புகள்: கட்டுரை :

கலைஞர் பெற்று தந்த உரிமைகள், மாணவர் நலனில் கலைஞர், கலைஞர் காத்த மனிதநேயம்

(பேச்சு 4 நிமிடங்கள்)

கலைஞர் ஆட்சியில் கல்வி புரட்சி, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்ட கலைஞர், பெரியார், அண்ணா வழியில் கலைஞர்

கல்லூரி மாணவர்களின் போட்டிக்கான தலைப்புகள் கட்டுரை:

வள்ளுவம் போற்றிய கலைஞர், திராவிடத்தின் எழுச்சி கலைஞர், இந்திய ஜனநாயகத்தில் கலைஞரின் பங்கு

(பேச்சு 5 நிமிடங்கள்)

நவீன தமிழ்நாட்டின் சிற்பி - கலைஞர்!, மகளிர் மாண்பு காத்த கலைஞர், கலைஞரும் சுயமரியாதையும்!

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கலைஞர் வழிநின்று மகளிருக்கு மாதம் ரூ.ஆயிரம் வழங்கி கவுரவப்படுத்தியுள்ளார் நம் முதல்வர்!

ஒன்றிய அரசு பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீட்டை உடனே நிறைவேற்ற வேண்டும்!

நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி ஓவியம் அறிக்கை!

சென்னை, அக். 6- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழிநின்று நமது முதல்வர் தளபதி அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தைக் கொண்டுவந்து மகளிருக்கு மாதம் ரூ.1000 வழங்கி கவுரவப்படுத்தியுள்ளார். இன்று ஒன்றிய அரசு பெண்களுக்கு 33 சத விகித இட ஒதுக்கீடு சட்டம் கொண்டு வந்துள்ளதை உடனடியாக நிறைவேற்றிட வேண்டும் என நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி.ஓவியம் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

வரலாறு காணாத சரித்திரத்தைப் படைத்து 1989ல் பெண்களுக்கு சொத்துரிமை அளித்து சமஉரிமை உண்டு என்ற சட்டத்தை உருவாக்கியவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர். அதுபோல் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 1996ம் ஆண்டில் 33% இடஒதுக்கீடு கொடுத்து அரசியல் அதிகாரத்தை பெண்களுக்கு அளித்து பெண்களை அரியணையில் அமர வைத்தவர் நமது தலைவர் கலைஞர். இது மட்டுமல்லாமல் காவல்துறையில் மகளிர் காவல்நிலையங்களை உருவாக்கியவர் நமது தலைவர் கலைஞர். இன்றும் தலைவர் கலைஞர் அறிமுகம் செய்து வைத்த மகளிர் சுயஉதவி குழுக்கள் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. ஏழை வீட்டு பெண்கள் டி.வி இல்லாததை அறிந்து எல்லோர் வீட்டிலும் வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகளை கொடுத்து அனைவரும் நடப்பு செய்திகளை தெரிந்து கொள்வதற்காகவே குடும்ப தலைவிகளுக்கு கிடைத்த இந்த பெரியசொத்து இந்த இலவச டிவி திட்டம் மற்றும் இலவச கேஸ் இணைப்பு என்று பெண்களுக்கு உண்டான எல்லா சலுகைகளையும் அள்ளி வழங்கியவர் நமது தலைவர் மட்டுமே.

தலைவர் கலைஞர் வழியில் நமது மாநில முதலமைச்சர் தளபதி அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் என குடும்பத் தலைவிகளுக்கு ரூ.1,000/- இவ்வாறு திட்டத்தை அறிவித்ததை பிற மாநிலங்களும் வியந்தன.

இவ்வாறு தமிழ்நாட்டு பெண்களுக்கு 33% சதவீத இடஒதுக்கீட்டை அன்றே அள்ளி கொடுத்தவர் நமது தமிழின தலைவர். அதே போல் அரசியலில் கண்ணியம் கட்டுப்பாடு மேடையில் என்று அரசியல் நாகரிகத்தை கடைப்பிடித்து, தன்னுடய தொண்டர்களும் அவ்வழியே செல்ல வேண்டும் என்று நினைத்தவர் நமது கலைஞர். அரசியல் விரோதம் என்று இல்லாமல் அனைத்து தரப்பட்ட இயக்கங்களுக்கு எப்போதும் உதவி கரம் நீட்டியவர் நமது தலைவர்.

இவையெல்லாம் தலைவரின் மாண்பு, பண்பு என்று வரலாற்றுச் சிறப்புமிக்க குணங்கள், இதை இன்று துள்ளி குதிக்கும் பிஜேபி தலைவர்கள் அறிய வேண்டும். ஆதலால் பிஜேபி கொண்டு வந்த 33 சதவீத பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்பதே நமது திராவிட இயக்கத்தின் நோக்கமாகும்.

இவ்வாறு நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி.ஓவியம் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி
மின்துறை

த.தொ.நு.மை.ந.க.எண்.சி1/3113/2023 **குறுகிய e - ஒப்பந்தப்புள்ளிகள்**

கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் மேற்பார்வை பொறியாளர், மின்துறை பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் கோரப்படுகிறது.

ஒரு வருடத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து கணினிகள், வன்பொருள், மென்பொருள் மற்றும் நுகர்பொருட்களுடன் வசதி மேலாண்மை சேவை மற்றும் ஆண்டு பராமரிப்பு பணி.

பணியின் மதிப்புத் தொகை 3,89,39,495/-	ஒப்ப முன் வைப்புத் தொகை 3,89,395/-

ஒப்ப படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். நிறைவு செய்யப்பட்ட ஒப்பப்புள்ளிகள் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் **16.10.2023 அன்று பிற்பகல் 3.00 மணி** ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **17.10.2023 பிற்பகல் 3.15 மணி** முன் விளக்க கூட்ட நாள் **10.10.2023 பிற்பகல் 3.30 மணிக்கு,** தகவல் தொழில் நுட்ப மையம், அம்மா மாளிகை, 1வது தளம், **'B'** பிரிவு ரிப்பன் மாளிகை, பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை – 600003

செ.ம.தொ.இ / 5447 / ஒப்பந்தப்புள்ளி / 2023 **கண்காணிப்பு பொறியாளர் / மின்சாரம்**

சென்னை புழல் மத்திய சிறையில் போதை ஒழிப்பு மறுவாழ்வு மையத்தை சிறைகள் துறை தலைமை இயக்குநர் அமரேஷ் பூஜாரி முன்னிலையில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்.

க.செல்வம் எம்.பி. - சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. - டாக்டர் சுபேர்கான் பங்கேற்பு!

காஞ்சிபுரம் வடக்கு ஒன்றிய பாக முகவர்கள் கூட்டம்!

க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரை! பி.எம்.குமார் அறிக்கை!

காஞ்சிபுரம், அக். 6 - காஞ்சிபுரம் வடக்கு ஒன்றிய தி.மு.க. வாக்குச்சாவடி நிலை முகவர்கள், வாக்குச்சாவடி பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (6.10.2023 -வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு ஏ.ஜெ.எஸ். மகாலில் நடைபெறுகிறது. ஒன்றியச் செயலாளர் பி.எம்.குமார் வரவேற்றுப் பேசுகிறார். ஒன்றிய அவைத் தலைவர் எஸ்.மாரிமுத்து தலைமை வகிக்கிறார்.

இரா.இளஞ்செழியன், எஸ்.வி.ரமேஷ், மகாலட்சுமி ராஜசேகர், அ.வேலுச்சாமி, எஸ்.எம்.ஆர். சசிக்குமார், பி.என்.ரவி, நா.கருணாகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரை யாற்றுகிறார். மேலும் மாவட்ட துணைச் செயலாளர் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., டாக்டர் ஆர்.சுபேர்கான், மலர்கொடி குமார், எம்.எஸ். சுகுமார், நித்யா சுகுமார் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

அதுபோது இளைஞர் அணி, மகளிர் அணி உறுப்பினர் சேர்த்தல் கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது. மேலும் டிசம்பர் 17 சேலத்தில் நடைபெறும் 2-வது இளைஞர் அணி மாநில மாநாட்டில் கலந்து கொள்ளும் இளைஞர்களின் பெயர் பட்டியலை தயாரித்து அனைத்து ஊராட்சிகளில் இருந்தும் ஒன்றியக் கழகத்திற்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

எனவே இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி ஒன்றியச் செயலாளர் பி.எம். குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் ஆர்.கே.பேட்டை ஊராட்சி ஒன்றியம் தனியார் திருமண மண்டபத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட பணிகள் துறை சார்பாக நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் 300 கர்ப்பிணி பெண்களுக்கு பூ, பழம், புடவை உள்ளிட்ட 11 வகையான சீர்வரிசை பொருட்கள் மற்றும் 5 வகையான உணவுப் பொருட்களை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி – மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ வழங்கி வாழ்த்தினார்கள் . உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், மாவட்ட ஊராட்சி தலைவர் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் எஸ்.கே.லலிதா, ஒன்றிய குழு தலைவர் ரஞ்சிதா ஆபாவாணன், திருத்தணி குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் காஞ்சனா, ஒன்றிய செயலாளர்கள் பி.டி.சந்திரன், சி.என்.சண்முகம், பெ.பழனி, சி.ஜெ.சீனிவாசன், ஜி.ரவீந்திரா, ஒன்றிய குழு துணை தலைவர் திலகாவதி ரமேஷ் திட்டகுழு உறுப்பினர் ஷாம் சுந்தர், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ம.கிரண், முரளி சேனா, சித்திக், , உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.